2. தகவல் கோரல்

(அ) தருமபுரி, ஆசிரியர் தகுதித் தேர்வுக்கான விண்ணப்பம் பெறச் சென்ற ஆசிரியை தாக்கப்பட்டது

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எம். ஆறுமுகம்,* please sit down. *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தகுதித் தேர்வுக்கான விண்ணப்பங்களை தருமபுரி மாவட்டத்தில் தற்போது ஒரு ஆசிரியை மாவட்டத் துணைக் கண்காணிப்பாளரால் பொது இடத்திலே தாக்கப்பட்ட செய்தி பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் வந்து நமக்கெல்லாம் கடுமையான மன வேதனையை வழங்கியது. அந்த விண்ணப்பங்களை அச்சடித்து விநியோகிப்பதில், குறிப்பிட்ட வங்கிகளில்தான் பணம் செலுத்திப் பெறவேண்டும் என்று கூறியதில், அந்தத் தலைமை நிருவாகத்தில் பல்வேறு வகையான குளறுபடிகள் இருந்தன. இப்போது ஒரு வழியாக விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, 12 இலட்சம் பேர் ஆசிரியர் தேர்வுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் நான் மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புவது, நடந்து முடிந்த சம்பவம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நிச்சயமாக வந்திருக்கும். ஒரு பெண் ஆசிரியை என்ற முறையில் சம்பந்தப்பட்டவர்கள்மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா? இரண்டாவது ஏற்கெனவே நம்முடைய* T.R.B.*–யில்,* Home Science *(மனையியல்) மற்றும்* Computer Science, B.Ed., M.Ed., *முடித்தவர்கள்,* Bio–Chemistry *முடித்தவர்கள் எல்லாம் சான்றிதழ் சரிபார்ப்பின்போது, அந்த சப்ஜெக்ட் தகுதியில்லை என்று கடந்த காலத்தில் அறிவுறுத்தப்பட்டு, அவர்கள் வெளியிலேயே இருந்தார்கள். அவர்களும் இப்போது மனுக்கள் வாங்கி விண்ணப்பித்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் அனைவரும் தேர்வு எழுதத் தகுதியுள்ளவர்களா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2012 ஏப்ரல் 16]

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22–3–2012 ஆம் நாளிலிருந்து தகுதித் தேர்வுக்கான விண்ணப்பங்கள் தமிழகத்தில் 66 மாவட்டங்களில் உள்ள மாவட்டக் கல்வி அலுவலகங்களில் வழங்கப்பட்டு வந்தன. இதுவரை 8 இலட்சம் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. 22–3–2012 முதல் 28–3–2012 வரை 29,700 விண்ணப்பங்கள் தருமபுரி மாவட்டக் கல்வி அலுவலகத்தில் வழங்கப்பட்டுள்ளன. மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு வரும் பட்டதாரிகள் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் கடினமின்றி விண்ணப்பங்களைப் பெறுவதற்கு ஏதுவாக 10 இடங்களில் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வந்தன. காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை விண்ணப்பங்களை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதற்கான அறிவிப்புகளும் வைக்கப்பட்டிருந்தன. 28–3–2012 அன்று காலை 8 மணி முதல் 6 மணி வரை அமைதியான முறையில் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வந்தன. அதனடிப்படையில், தருமபுரி மாவட்டத்தில் இதுவரை 29,700 விண்ணப்பங்கள் விற்கப்பட்டன. பூர்த்தி செய்யப்பட்டு வரப்பெற்ற விண்ணப்பங்கள் 24,392. ஆனால், இதுவரை 4,308 விண்ணப்பங்கள் வரவில்லை. இதில் என்ன நடந்திருக்கிறது என்று சொன்னால், அங்கு வரிசையில் நின்றிருந்த ஆசிரியர்கள் தங்களுக்கு விண்ணப்பம் கிடைக்காதோ என்ற எண்ணத்தில் தள்ளுமுள்ளு நடைபெற்று இந்தச் சம்பவம் நடைபெற்றதே தவிர, அங்கு வேறு எந்தக் குளறுபடியும் இல்லை. தகுதிக்கேற்ப தருமபுரி மாவட்டத்தில் அனைத்து விண்ணப்பங்களும் அங்கே வழங்கப்பட்டிருக்கின்றன.*

குறிப்பாக, தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பங்கள் மொத்தம் 58,900. ஆனால் விற்பனையாகியிருப்பது 29,700. இதில் இன்னும் விற்காமல் மிகுதியாக மீதி இருப்பது 29,200. இதை இந்த நேரத்தில் குறிப்பிடுவதற்குக் காரணம், வரிசையில் ஆசிரியர்கள் நின்று அந்த விண்ணப்பப் படிவங்களை அமைதியாகப் பெற்றிருந்தால், இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்காது. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசைப்

பொறுத்தவரையில், எல்லா விண்ணப்பங்களும் அந்தந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் உடனடியாக அதிகப்படியான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. குறிப்பிட்ட ஒருசில ஆசிரியர்கள் அந்த விண்ணப்பங்கள் கிடைக்காதோ என்ற எண்ணத்தின் அடிப்படையில் அவர்கள் செய்த தவறுகளின் காரணமாக இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. அனைத்து விண்ணப்பங்களும் விற்றுத் தீர்ந்திருக்கின்றன. அது முடிந்து இப்போது விண்ணப்பங்களும் பெறப்பட்டிருக்கின்றன. இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மூன்று பாடங்களுக்கான ஆசிரியர்கள், அதாவது Home Science, Computer Science, Bio–Chemistry முடித்த ஆசிரியர்கள் தேர்வு குறித்த கேள்வியைக் கேட்டார்கள். அவர் தருமபுரி மாவட்டத்தில் ஆசிரியர் தாக்கப்பட்டது குறித்துத்தான் கேள்வி எழுப்பியிருக்கிறார். தற்போது மேலும் சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு பதில் சொல்கிறேன் என்று சொல்லி, இந்த நிலைமை தற்போது சரி செய்யப்பட்டு, சீரான நிலைமையில் இருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) மத்திய தொகுப்பிலிருந்து தமிழகத்திற்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெயின் அளவைக் குறைத்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய தொகுப்பிலிருந்து தமிழகத்திற்கு வழங்கக்கூடிய மண்ணெண்ணெயைக் குறைவாக வழங்கிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், கிராமப் பகுதிகள் மற்றும் நகர்ப் பகுதிகளில் நியாய விலைக் கடைகளுக்கு மக்கள் மண்ணெண்ணெய் வாங்கச் செல்கின்றபோது, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய மண்ணெண்ணெய் குறைவாக வருகின்ற காரணத்தினாலே, நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கின்ற குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் கிடைப்பதில்லை. மலைப் பகுதி போன்ற பகுதிகளில் வாழக்கூடிய மக்களுக்கு மண்ணெண்ணெய் இல்லாத காரணத்தினாலே அவர்களுக்குச் சிரமம் ஏற்படுவது மட்டுமல்ல; மிருகங்களால் கடுமையான தொல்லைகளுக்கும் சிக்கல்களுக்கும்,